# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 162 | செவ்வாய்க்கிழமை Tuesday | 08.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# சட்டம் ஒழுங்கு குறித்து பேச தி.மு.க.வுக்கு தகுதியில்லை

## சட்டப்பேரவை பதிலுரையில் முதலமைச்சர் விஜய் ஆவேசம்



சென்னை: சட்டம்-ஒழுங்கு குறித்து பேசும் முன் திமுக தனது ஆட்சியை கண்ணாடியில் பார்க்க வேண்டும் என முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

"எதிர்க்கட்சிகளின் பேச்சை கேட்கிறோம்"

தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் இன்று பதிலுரை வழங்கினார். அப்போது பேசிய அவர், "காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது, முதலமைச்சர் பதிலளித்துப் பேசுவது தொடர்பாக நக்கலாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள்.

நம்மைப் பொறுத்தவரை, சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு உரிய நேரத்தை வழங்காமல் இடைமறித்துப் பேசுவது ஒரு தலைமைக்கு அழகல்ல. எந்தவித முன் தயாரிப்பும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் பேசுவதும் சரியாக இருக்காது.ஏனென்றால், நாம் இங்கு பேசுவது நமக்காக மட்டுமல்ல, எட்டு கோடி மக்களின் நலன்களைத் தீர்மானிப்பதற்காக. ஆம், நான் தயாராகி பேசுகிறேன். என் மக்களுக்காக என் மனதில் இருந்து பேசுகிறேன்.

அதேபோல், கூட்டுப் பொறுப்பை உணர்ந்து அமைச்சர்கள் பதிலளிப்பது என்பது ஆட்சியில் நடைபெறும் இயல்பான நடைமுறையாகும். ஆனால், தற்போது எதிர்க்கட்சியினர் மட்டும் அதை வசதியாக மறந்துவிடுகிறார்கள். முதலமைச்சரைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் தரக்குறைவாகப் பேசுவதை மிகப்பெரிய அரசியல் முதிர்ச்சியாக நினைத்துக்கொள்கிறார்கள் போலத் தெரிகிறது.

எல்லா உறுப்பினர்களும் அவரவர் தொகுதியைச் சார்ந்த மக்களின் குரலை இந்த அவையில் ஒலிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அவர்களின் கருத்துகளைப் பொறுமையாகக் கேட்டு, அதற்குப் பொறுப்புடன் பதிலளிப்பதுதான் உண்மையான தலைமைப் பண்பு. நாம் பொறுமையாக இருப்பதற்கான காரணத்தை எதிர்க்கட்சிக்கு தெளிவுபடுத்திய பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசிய முழு உரையையும் சபையில் இருந்து நாம் பொறுமையாகக் கேட்டோம். அதேபோல், அவர்களும் மற்ற உறுப்பினர்கள் பேசுவதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும். அதைத்தான் நாங்கள் அன்றும் தெரிவித்தோம். மக்களின் குரலை ஒலிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பது மட்டுமல்லாமல், அந்தக் கேள்விகளின் மீது ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்குபவர்கள் அல்ல.

"திமுக ஆட்சியில் அதிமுக திட்டங்கள் ரத்து ஏன்?" இந்த ஆட்சியில் திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் திமுகவினர் கூறினர். ஆனால், 2021 ஆம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, முந்தைய அதிமுக அரசால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் ஏன் ரத்து செய்யப்பட்டன என்பது தெரியவில்லை. அவற்றையெல்லாம் பட்டியலிட்டால், அதற்கென்றே தனியாக ஒரு பதிலுரை வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

தாலிக்குத் தங்கம் வழங்கும்திட்டம்,அம்மா இருசக்கர வாகனத் திட்டம், இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம், அம்மா மினி கிளினிக் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. அதுமட்டுமல்லாமல்,விலையில்லா மடிக்கணினி திட்டத்தையும்பல ஆண்டுகளாகச் செயல்படுத்தாமல் வைத்திருந்துவிட்டு, தேர்தல் வருவதற்குமுன்புகடைசி நான்குமாதங்களில்மட்டும் செயல்படுத்தினார்கள். அதேபோல், தமிழ்நாட்டில் 2021-க்கு முந்தைய அதிமுக அரசால் அறிவிக்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட பல்வேறு புதிய திட்டங்களும் முந்தைய திமுக ஆட்சியில் ரத்து செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்தில் ரத்து செய்யப்பட்ட சில திட்டங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் ஊணிமேட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டது.

ரூ.235 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகத் திட்டமும் ரத்து செய்யப்பட்டது.

சட்டம் ஒழுங்கு பேசுவதற்கு முன்னால், உங்கள் ஆட்சியை நீங்கள் கண்ணாடியில் ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டால் நல்லது. கடந்த அறுபது ஆண்டுகால ஆட்சியில்,1971 ஆம் ஆண்டு மதுவிலக்கை ரத்து செய்து தமிழ்நாட்டில் மதுவைப் பரப்பியது யார்? சுற்றிலும் நெருப்பு எரியும் போது கற்பூரம் எப்படி தப்பிக்க முடியும் என்றுசொல்லி,அண்டை மாநிலங்கள் மதுவிற்பனை மூலம் வருவாய் ஈட்டும்போது தமிழ்நாடு மட்டும் வருவாய் இழக்க வேண்டுமா? என்று கூறி மதுவிலக்கை ரத்து செய்து, தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்தையும் சீரழித்தது யார்

மக்களைச் சீரழித்தது போதாதென்று, ஆற்று மணல் உள்ளிட்ட இயற்கை வளங்களைச் சுரண்டி, இயற்கை வளங்களையும் சீரழித்தது யார்? எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில்தான், அது திமுக தான்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "நிர்வாகக் குறைபாடுகளைச் சீர்செய்ய போதுமான கால அவகாசமும், உறுதியான நடவடிக்கைகளும் தேவைப்படுகிறது. அதைத்தான் நம்முடைய அரசு செய்து வருகிறது. இதெல்லாம் தெரிந்திருந்தும், தெரியாததுபோல் இருப்பதைத்தான் திமுகவுக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் விரும்புகிறோம்.

தமிழ்நாட்டு மக்கள் திமுக ஆட்சியில் நடைபெற்ற அனைத்து விஷயங்களையும் மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்பு மிகவும் வலிமையானது. அதற்கான பதிலைத்தான் தமிழ்நாட்டு மக்கள் தேர்தல் தீர்ப்பின் மூலம் வழங்கியிருக்கிறார்கள். இப்போதும் சொல்கிறோம். நம்முடைய அரசு குற்றச்சாட்டுகளுக்கு வெறும் பிரசாரங்களால் மட்டும் பதிலளிக்கும் அரசு அல்ல. வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் செயல்பாடுகளின் மூலமாக மட்டுமே பதிலளித்து வரும் அரசு.

மக்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவதில் கண்ணும்கருத்துமாகஇருக்கிறோம். இனியும் அப்படித்தான் இருப்போம். கடந்த திமுக ஆட்சியில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிர்வாகம் தொடர்பாக அதிகமாகஎழுந்தவிமர்சனங்களில் முக்கியமானவை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம், அரசியல் தலையீடு மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள்.

# மிசாவை பற்றி பேச முதலமைச்சர் விஜய்க்கு தகுதி கிடையாது

## எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



காவல்துறை மானியக் கோரிக்கை விவாதம் நிறைவடைந்த நிலையில், முதல்-அமைச்சர் விஜய் இன்று பதிலளித்து பேசினார். அப்போது திமுக ஊழல்கள் செய்ததாக அமலாக்கத்துறை கூறியதாக ஆதாரத்துடன் பேசினார். இதையடுத்து, இதற்கு பதில் பேச எதிர்க்கட்சிக்கு சபாநாயகர் அனுமதி மறுத்துவிட்டார். இதனால் திமுகவினர் சட்டசபையை விட்டு வெளிநடப்பு செய்தனர். இதன் பின்னர் சட்டசபை வளாகத்தில் எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

பொய் குற்றச்சாட்டு

"தவெகவின் 114 நாட்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துள்ளதை ஆதாரமாக கூறினோம். முதல்- அமைச்சர் இன்று மொத்தம் 45 நிமிடங்கள் பேசினார்.10 நிமிடங்கள் காவல்துறை சாந்து கூறினார். அதன் பின்னர் எந்தவித ஆதாரமுமின்றி எங்கள் மீது குற்றச்சாட்டுகளை முதல்-அமைச்சர் விஜய் முன்வைத்தார். நானும், சட்டமன்ற உறுப்பினர்களும் எழுந்து, எங்களுக்குபதில் கூறவாய்ப்பு வழங்குங்கள் என சபாநாயகரிடம் கூறினோம். ஆனால் எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனால் எங்களின் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் வெளிநடப்பு செய்துள்ளோம். எங்களின் கேள்விகளுக்கு முதல்-அமைச்சர் பதில் கூறவில்லை. 3 நாட்கள் நேரமுள்ளது. மனப்பாடம் செய்துவிட்டு, ஒப்புவித்தல் போட்டி மாதிரி முதல்-அமைச்சர் பேசியுள்ளார். பஞ்ச் டயலாக், சினிமா வசனம் போன்றவைதான் அதில் இருந்தது.

முதல்-அமைச்சர் விஜய்யின் உதவியாளர் விஷ்ணு கனமவளங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. அதனை விரைவில் வெளியிடுவேன்.

அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து

திமுக ஆட்சியில் வழக்குஇருப்பதைகூறுகிறார். சென்னையில் பட்டப்பகலில் கொலை நடந்துள்ளது. இதற்கெல்லாம் பதில் கூறாமல் 1970க்கு சென்றுவிட்டார். மிசாவை பற்றி பேச இவருக்கு தகுதி கிடையாது. சர்க்காரியா கமிஷன் பற்றி இவருக்கு ஏதாவது தெரியுமா? இவர் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து.

அமலாக்கத்துறை கூறியது வெறும் குற்றச்சாட்டுகள் மட்டுமே. அவை இன்னும் நிரூபிக்கப்படவில்லை. சர்க்காரியா கமிஷனுக்கு பிறகு திமுக 3 முறை ஆட்சிக்கு வந்துள்ளது. அவர்கள் தரப்பு அமைச்சர்கள் மீதும் வழக்குகள் உள்ளது. நாங்கள் பயந்துவிடுவோம் என்பதற்காக முன்னாள் அமைச்சர் நேரு வீட்டில் சோதனை நடந்தது. 6 மணி நேரத்துக்கும் மேலாக நடந்த சோதனையில் அங்கு ஒன்றும் சிக்கவில்லை. மிரட்டல்களுக்கு பயப்பட மாட்டோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் தேதியை அறிவித்தது தேர்தல் ஆணையம்




தமிழகத்தில் காலியாக 7 சட்டமன்ற தொகுதிகளில் இரண்டு தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அக்டோபர் 6 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. திருச்சி கிழக்கு, அம்பாசமுத்திரம், விராலிமலை, பெருந்துறை, கரூர் ஆகிய தொகுதிகளுக்கு தேர்தல் நடத்துவதில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் இந்த தொகுதிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்படவில்லை.

தேர்தல் எப்போது?

செப்டம்பர் 9 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது.

வேட்பு மனு தாக்கல் நிறைவு: செப்டம்பர் 16

வாக்குப்பதிவு : அக்டோபர் 6

வாக்கு எண்ணிக்கை; அக்டோபர் 9

அதி.மு.க. சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்யபாமா (தாராபுரம்) இந்த தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.இருவரும் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்ததால் தொகுதிகள் காலியானது. இந்த இரண்டு தொகுதிகளிலும் தவெக சார்பில் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்யபாமா (தாராபுரம்) வேட்பாளர்களாக நிறுத்தப்பட வாய்ப்பு உள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளியில் ஆசிரியர் தின விழா; ஆண்டு விழா கோலாகலம்




*ஊத்தங்கரை:* கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர்மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா மற்றும் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு ஸ்ரீ வித்யா மந்திர் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். பள்ளியின் சேர்மேனும், நல்லாசிரியருமான ஆர். தர்மலிங்கம் முன்னிலை வகித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வி.கீதாலட்சுமி கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு குறித்து அவர் எடுத்துரைத்ததோடு, சிறந்த ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

விழாவில் தொழிலதிபர் மாலதி தர்மலிங்கம், ஸ்ரீ வித்யா மந்திர் கல்லூரி செயலர் அருள், பள்ளி முதல்வர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.ஆடுதுறை அழகு பன்னீர்செல்வம் தலைமையில் திரைப்படப் பாடல்கள் இளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் வழிகாட்டுகிறது என்கின்றதலைப்பில்நகைச்சுவை நகைச்சுவை சிந்தனை பாட்டு பட்டி மன்றம் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# கோவையில் முதியோர் நலனுக்காக ‘அபயம்’ 24/7 உதவி சேவை தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## இதன் மூலமாக முதியோர்களுக்கு தேவையான பல்வேறு சேவைகளை வழங்க உள்ளனர்



கோவையைச் சேர்ந்த புவன தர்மம் அறக்கட்டளை சார்பில், முதியோரின் மருத்துவத் தேவைகள் மற்றும் அவசர கால உதவிகளை ஒருங்கிணைக்கும் வகையில் 'அபயம்' என்ற புதிய முதியோர் நல உதவி சேவை தொடங்கப்பட்டுள்ளது. மூத்த இதயநோய் சிகிச்சை நிபுணரும், பி.எஸ்.ஜி. சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இயக்குநருமான டாக்டர் ஜே.எஸ். புவனேஸ்வரன் தலைமையில் செயல்படும் புவன தர்மம் அறக்கட்டளை, கடந்த 2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டு, கலாசாரம், கல்வி, மருத்துவம்,சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகிறது. அபயம் சேவையின் மூலம் முதியோர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் , இருபத்துநான்கு மணிநேரமும் வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும், மருத்துவ உதவியைப் பெற முடியும். புறநோயாளர் சிகிச்சை, உள்நோயாளர் சிகிச்சை மற்றும் அவசர மருத்துவ உதவிகளும் வழங்கபட்டு வருகிறது..

அபயம் மூலம் வழங்கப்படும் மருத்துவ வழிகாட்டுதல் மற்றும் மருத்துவமனைதன்னார்வலர் ஒருங்கிணைப்பு சேவைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

இந்த சேவையை பத்மஸ்ரீ டாக்டர் ஆர்.வி. ரமணி, சங்கரா கண் அறக்கட்டளை தலைவர், தொடங்கி வைத்தார். சக்தி மசாலா நிறுவனர் பி.சி. துரைசாமி மற்றும் இயக்குநர் சாந்தி துரைசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முதியோருக்கான முழுமையான ஆதரவு அமைப்பை உருவாக்கும் நோக்கில், சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் திருவனந்தபுரத்தில் செயல்படும் பிரயோஜனா நிறுவனத்துடன் 'அபயம்' இணைந்து செயல்படுகிறது.'அபயம்' மருத்துவ வழிகாட்டுதல், இதயநோய் ஆலோசனை மற்றும் மருத்துவமனை வருகை ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும் வகையிலும், பிரயோஜனா நிறுவனம் வீட்டிலேயே முதியோருக்கான தேவைகள், போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் துணை சேவைகளை வழங்கும். வரும் 14ம் தேதி முதல் இச்சேவை முழுமையாக செயல்படத் தொடங்கும், மேலும், 'அபயம்' மொபைல் செயலி மற்றும் இணையதளம் உருவாக்கப்பட்டு அவை விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வர இருக்கின்றதாக தெரிவித்தனர்.

# தென்காசியில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து போட்டியில் வென்று கோவை திரும்பிய மாணவிகளுக்கு மேளதாளம் முழங்க பெற்றோர்கள் உற்சாக வரவேற்பு அளித்த சம்பவம் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது




சி.பி.எஸ்.சி. பள்ளிகளிடையே மாநில அளவிலான கைப்பந்துப் போட்டி தென்காசியில் உள்ள வேல்ஸ் வித்யாலயா பள்ளியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது. இப்போட்டியில் தமிழகம் முழுவதிலும் இருந்து 80-க்கும் மேற்பட்ட சி.பி. எஸ்.சி. பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். பல்வேறு சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில் பங்கேற்ற கோவை சி.எஸ். அகாடமி மாணவிகள், இறுதிப் போட்டிக்குள் நுழைந்து, 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதலிடத்தையும், 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் மூன்றாமிடத்தையும் பிடித்து சாதனை படைத்தனர்.

இதில் 14 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் முதல் பரிசை வென்ற மாணவிகள் அடுத்த மாதம் பஞ்சாபில் நடைபெற உள்ள தேசிய அளவிலான கைப்பந்து போட்டியில் பங்கேற்க உள்ளனர். வெற்றிக் கோப்பையுடன் இன்று பள்ளிக்கு திரும்பிய மாணவிகளுக்குபேண்டு வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெற்றோர்களும்,பள்ளி ஆசிரியர்களும் திரண்டு மாணவிகளுக்கு பூங்கொத்துகள் கொடுத்து நெகிழ்ச்சியுடன் வரவேற்றனர். கைப்பந்து அணிகளின் கேப்டன்கள் சமிக்ஷா ஸ்ரீனிவாசன், நக்ஷத்திரா சிவக்குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில், "விடுமுறை, தேர்வு காலத்திலும் கடுமையான பயிற்சியை மேற்கொண்டோம். பள்ளி தரப்பிலும், பெற்றோர் தரப்பிலும் எங்களுக்கு முழு ஆதரவு கொடுத்தனர்.அதனால் தான் இந்தக் கோப்பையை வெற்றி பெற முடிந்தது. அடுத்து தேசிய அளவிலான போட்டியில் வெற்றி பெறுவதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்" என்றனர். சி.எஸ். அகாடமி முதல்வர் ஸ்மிதா பாபுராஜ் கூறுகையில், "கோப்பையுடன் திரும்பியுள்ள மாணவிகளை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்கும் மாணவிக க்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

பெற்றோர்களுள் ஒருவரான முனைவர் கவிதா கூறுகையில், "சி.எஸ். அகாடமி மாணவிகள் 23 பேர் இந்தப் போட்டியில் பங்கேற்று, மாநில அளவில் பெரிய சாதனை படைத்துள்ளனர். பயிற்சியாளர்கள் மோகன், நிவேதா,சக்தி ஆகியோரின் தொடர் முயற்சி எங்கள் குழந்தைகளுக்கு கோப்பையைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இது மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது" என்றார்.



ஈரோடு மாவட்டம், நசியனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில், கலவை உரவீதியில் வசித்து வரும் திரு.காமராஜ் அவர்களின் இல்லத்தில் ஏற்பட்ட பட்டாசு தீ விபத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (07.09.2026) நேரில் சென்று பார்வையிட்டு, விபத்து குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.



மதுரையில்ஜெயம்டெக்கரேட்டர்ஸ்இல்லதிருமணவிழாகருப்பாயூரணிதனியார்திருமணமஹாலில்நடைபெற்றது இதில்அதிமுகபுறநகர்கிழக்குமாவட்டசெயலாளர்முன்னாள்எம்எல்ஏராஜன்செல்லப்பாகலந்துகொண்டுமணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார் இதன் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் தொழிலதிபர்கள் உறவினர்கள் நண்பர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர் இந்நிகழ்வில் ஜெயம் டெகரேட்டர்ஸ் உரிமையாளர்கள் ரமேஷ் நாகலட்சுமி சுரேஷ் புவனேஸ்வரி ஆகியோர் வருகை தந்த அனைவரையும் வரவேற்று சிறப்பித்தனர்



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்படுகின்றன.

# தனியார் நபர்களின் நீர் திருட்டால் காய்ந்து கருகும் விவசாய நிலங்கள்: தேனி ஆட்சியரிடம் விவசாயிகள் கண்ணீர் மல்க மனு



தேனி மாவட்டம் வயல்பட்டி - சத்திரப்பட்டி பகுதியில், தனியார் நபர்கள் சட்டவிரோதமாக ராட்சச மோட்டார்கள் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்வதால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் திரண்டு வந்து புகார் மனு அளித்துள்ளனர்.


தேனி மாவட்டம் வயல்பட்டி - சத்திரப்பட்டி கிராமங்களில் சுமார் இரண்டாயிரத்திற்கும்மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள சத்திரப்பட்டி கண்மாய் மூலம் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வீரபாண்டி தடுப்பணையில் இருந்து வரும் பெரிய வாய்க்கால் பகுதியில், சில தனியார் நபர்கள் சட்டவிரோதமாக 8 இன்ச், 16 இன்ச் அளவுள்ள ராட்சச மின் மோட்டார்களை அமைத்துத் தண்ணீரை உறிஞ்சி வருகின்றனர். மேலும், 10-க்கும் மேற்பட்ட ராட்சசக் கிணறுகளை வெட்டி, தினமும் பலலட்சம்லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சி வியாபாரம் செய்து வருவதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்

இதனால் அப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்திற்குச் சென்று, நெல் விவசாயம் செய்ய முடியாமல் பயிர்கள் காய்ந்து கருகும் அவலைநிலை ஏற்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, அப்பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபக் கழிவுநீரும், சர்க்கரை ஆலை சாக்கடை நீரும் நேரடியாகக் கண்மாயில் கலப்பதால் கடுமையான நோய்த்தொற்று பரவும் அபாயமும் உருவாகியுள்ளது.

பலமுறை அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வேதனை தெரிவிக்கும் விவசாயிகள், உடனடியாக கள ஆய்வு மேற்கொண்டு நீர் திருட்டில் ஈடுபடும் நபர்களின் மின் இணைப்பை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். ஏழை விவசாயிகளின் கண்ணீரையும், வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## விநாயகர் ஊர்வல ஏற்பாடுகளை மேற்கொள்ளக்கோரி இந்து மக்கள் கட்சி மனு



ராணிப்பேட்டை,செப்.7: வாலாஜா நகரில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு, ஊர்வலம் மற்றும் நிறைவு பூஜைக்கான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி இந்து மக்கள் கட்சி சார்பில் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

இந்து மக்கள் கட்சியின் வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் நிர்வாகிகள் அளித்த மனுவில், வாலாஜா நகர மையப் பகுதியில் வரும் 14-ம் தேதி விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளதாகவும், தொடர்ந்து 16-ம் தேதி காலை 10.30 மணியளவில் வாலாஜா ஐயப்பன் கோவில்அருகில்இருந்து விநாயகர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அரசு மருத்துவமனை பின்புறம் உள்ள வீசி மோட்டூர் ஏரியில் நிறைவு பூஜை நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலம் நடைபெறும் பாதை மற்றும் ஏரிப் பகுதியில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தடுப்புகள் அமைக்க வேண்டும். தேவையான இடங்களில் ஜேசிபி மற்றும் கிரேன் வசதிகளைதயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். தீயணைப்புத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும், விநாயகர் ஊர்வலம் செல்லும் பாதையில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் பிரியாணி கடைகளை மாற்றுப் பாதையில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள வேகத்தடைகளை அகற்றுவதுடன், ஊர்வலப் பாதை முழுவதும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மனுவில் இடம்பெற்றிருந்தன.

மனுவை பெற்றுக்கொண்ட வருவாய் கோட்டாட்சியர், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவிட்டு, தேவையான அனைத்து பணிகளையும்துரிதமாக மேற்கொண்டு சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்து தருவதாக உறுதியளித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கௌரவத் தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் பார்த்திபன், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார்,ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், கிழக்கு ஒன்றியத் தலைவர் அன்பழகன், மேற்கு ஒன்றியத் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (07.09.2026) நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, ஆதார் கார்டு. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தார்சாலை, மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை,வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்320மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவம் காப்பீடுதிட்டத்தின் கீழ்கால்களை இழந்த 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,17,800/- மதிப்பிலான செயற்கை கால்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி)ரமேஷ்,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர் கணேஷ், (முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டம்) மாவட்ட திட்ட அலுவலர் சுரேஷ்குமார்,அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழக உள் மாவட்டங்களில் செப்.11 வரை 7 டிகிரி அளவுக்கு வெப்ப நிலை உயர வாய்ப்பு



சென்னை:தமிழகத்தின் உள் மாவட்டங்களில் (செப்.8) முதல் செப்.11-ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு தெலங்கானா முதல் மன்னார் வளைகுடா வரை, ராயலசீமா மற்றும் தமிழகபகுதிகள் வழியாக சுமார் 0.9 கி.மீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (செப்.8) ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். செப்.9-ம் தேதிமேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒருசில இடங்களில்இடி,மின்னலுடன் கூடிய மிதமான மழையும், சென்னை, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

செப்.10-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர மாவட்டங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

செப்.11-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில்ஓரிரு இடங்களில் மிதமான மழையும், கடலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், தமிழகத்தின் இதர பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், செப்.12, 13 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

## கோவையில் நடைபெற்ற இந்திய பாரா கிரிக்கெட் லீக் 3.0 நிறைவு, வெற்றிக்கோப்பையை தட்டி சென்ற தமிழ்நாடு அணி

### கோப்பைகளுடன் பரிசுகளும் வழங்கப்பட்டது: ஒரு கிரிக்கெட் போட்டியாக அமைந்தது என ரசிகர்கள் உற்சாகம்



மாற்று திறனாளிகளின் வாழ்க்கையை மாற்றும் வகையில், இந்திய பாரா கிரிக்கெட் லீக் எனும் போட்டிகள் கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள தனியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. ரோட்ராக்ட் க்ளப் ஆப் கோயம்புத்தூர் கேலக்ஸி மற்றும் தமிழ்நாடு பாரா விளையாட்டு சங்கம் சார்பில் கடந்த செப்டம்பர் 4ம் தேதி முதல் 6ம் தேதி வரை நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட பாரா கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்றனர்.நான்கு அணிகளாக களமிறங்கிய இப்போட்டியில்,

தமிழ்நாடு டவுன் டவுன் டைகர்ஸ், கொல்கத்தா தன்டர் வாரியர்ஸ், டெல்லி யுனிகார்ன்ஸ், மற்றும் வியான் வீணை ஸ்கூல் ரேஜிங் சேலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் பங்கேற்றது. இதன் இறுதி போட்டிகள் இன்று நடைபெற்றது இந்த போட்டியில் தமிழ்நாடு டவுன் டவுன் டைகர்ஸ், கொல்கத்தா தண்டர் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி இப்போட்டிக்கான கோப்பையை தட்டி சென்றது. தமிழ்நாடு டவுன் டவுன் டைகர்ஸ் அணி, இந்தியன் பாரா கிரிக்கெட் லீக்ன் மூன்றாவது பதிப்பான ஐபிசிஎல் 3.0-ல் சாம்பியன் பட்டத்தையும் வென்றது.

மேலும் இறுதிப்போட்டியில் சிறப்பாக விளையாடியதாக சந்தோஷ் தொடர் நாயகன் விருதைப் பெற்றார். சிறந்த பேட்ஸ்மேன்க்கான விருதை கிருஷ்ணா பகடி, மற்றும் சிறந்த பந்துவீச்சாளர் விருதை சந்தோஷ் ஆகியோர் பெற்றனர். இதன் பரிசளிப்பு விழாவில் ரொட்டேரியன் மாருதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கோப்பைகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் இந்த நிகழ்ச்சியில்ரோட்டேரியன் மேலும் ரொட்டேரியன் முர்துஷா ராஜா, ரோட்டேரியன் அசோக்குமார், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வீரர்களை பாராட்டினர்.

இத்தொடருக்கு ரோட்டரிகோயம்புத்தூர்டவுன் டவுன் சார்பாக நடைபெற்ற ரோட்டேரியன் காட்வின்,ஆன்லைன் 360 அகாடமி உரிமையாளர் ஷேக் அப்துல்லா,ரோட்டரிகோயம்புத்தூர்யூனிகார்ன்ஸ் மற்றுமவியான் வீணை பள்ளி ஆகியோர் ஆதரவு வழங்கி போட்டிகளை மூன்று நாட்களாக சிறப்பாக நடத்தி இருந்தனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ரோட்டரியன் மாருதி கூறியதாவது..

பாரா கிரிக்கெட் வீரர்களின்திறமையைதேசிய அளவில் வெளிக்கொண்டு வருவதுடன், விளையாட்டில் அனைவருக்கும் சம வாய்ப்பை உருவாக்குவதே ஐபிசிஎல் இன் முக்கிய நோக்கமாகும்.இதன் மூலமாக மாற்று திறனாளிகளுக்கு அரசின் வேலை வாய்ப்பு உள்ளிட்ட சலுகைகளை வழங்க மத்திய மாநில அரசுகள் முன் வர வேண்டும் என்று தெரிவித்தார்.

## மண்டாடி படம் வெளியான பிறகு வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு போன்று படகு பந்தயத்திற்கான அங்கீகாரம் கிடைக்கும் என நம்புவதாக நடிகர் சூரி கோவையில் தெரிவித்துள்ளார்



கோவை நவகரை பகுதியில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காகமண்டாடி படக்குழுவினர் வருகை புரிந்தனர் அப்போது செய்தியாளர்களிடம் பேசிய நடிகர் சூரி மண்டாடி படம்வெளியானபிறகு நமது தமிழகத்தின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போன்று இந்த மீனவர்களின் வீர விளையாட்டான படகு சவாரி விளையாட்டிற்கு ம் அரசு உரிய அங்கீகாரம் அளிக்கும் என நம்புவதாகவும் முதல் முறையாக தனது படம் ஐ மேக்சில் வெளியாவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் தெரிவித்த அவர் , மண்டாடி படம் தான் நடித்த விடுதலை படத்தைப் போலவே மக்கள் மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார். மன்றாடி படத்தில் புகைப்பிடிக்கும் காட்சிகள் அமைவது தொடர்பாக படப்பிடிப்பின் போதே தான் கேள்வி எழுப்பியதாகவும் அப்போது கதைக்கு தேவை என்பதால் அது போன்ற காட்சிகள் இடம் பெற்றாலும் அதற்கு படத்தில் ஒரு மெசேஜ் கொடுத்துள்ளதாகவும் விளக்கமளித்தார் .நம் மண் சார்ந்த படத்தில் நடித்த தொட்டி தனக்கு இருப்பதாகவும் தெரிவித்தவர் பின்னர் மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடிய அவர் மேலும் அவர்களை உற்சாகப்படுத்த அவர்களுடன் நடனமாடினார். மேலும் வீர விளையாட்டுகளுக்கு இளம் தலைமுறையினர் ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்த அவர் கல்வியிலும் கவனம் தேவை என்றார்.

## பெயர், விலாசம் தெரியாத 80–85 வயது மதிக்கத்தக்க முதியவர் உயிரிழப்பு அடையாளம் காண காவல்துறை வேண்டுகோள்

ஈரோடு வடக்கு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட ஈரோடு சக்தி ரோடு, கனிராவுத்தர் குளம், பாரதி நகர் பஸ் நிறுத்தம் அருகே, கடந்த 05.09.2026 அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில், சுமார் 80 முதல் 85 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத முதியவர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த இரண்டு நாட்களாக அப்பகுதியில் படுத்திருந்ததாக தெரியவந்தது.

இதையடுத்து, அக்கம் பக்கத்தினர் 108 ஆம்புலன்ஸ் மூலம் தகவல் தெரிவித்து, அவரை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இறந்தவரின் பெயர், விலாசம் மற்றும் உறவினர்கள் குறித்த விவரம் இதுவரை தெரியவில்லை. எனவே, அவரது அடையாளத்தை கண்டறியும் பொருட்டு, அவரதுபுகைப்படத்துடன் இச்செய்தியை தங்களது தினசரி பத்திரிகையில் வெளியிட்டு, வழக்கின் புலன் விசாரணைக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அடையாளம் தெரிந்தவர்கள் ஈரோடு வடக்கு காவல் நிலையத்தை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



DHINATH DHALAM Morning Tamil Daily 08.09.2026



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (07.09.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உள்ளார்.



ஈரோடு விதைகள் குழுவின் சார்பாக ஈரோடு மாநகர் காசிபாளையம், அருகே உள்ள நேதாஜி வீதி 2 ல் அங்கன்வாடி மையத்தில் ஆசிரியர் இந்திராணி அழைப்பின் பேரில் மரக்கன்றை நடவு செய்யும் நிகழ்வு மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் விதைகள் குழுவின் தலைவர் விதை. இளங்கோவன் அவர்களின் ஒருங்கிணைப்பில் ஆசிரியர்கள் மற்றும் விதைகள் குழு உறுப்பினர்கள் என கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழகத்தில் அத்தியாவசிய மளிகை பொருட்கள் விலை கடும் உயர்வு; இல்லத்தரசிகள் கலக்கம்



தமிழகத்தில் அத்தியாவசிய மளிகை பொருட்களின் விலை கடும் உயர்வினால், பண்டிகை கால செலவை எதிர்கொள்ள முடியாமல் இல்லத்தரசிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தமிழகத்தில் மக்கள் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தும் அரிசி, சமையல் எண்ணெய், பூண்டு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை கடந்த இரண்டு மாதங்களில் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. அடுத்தடுத்து பண்டிகை காலங்கள் நெருங்கி வரும் வேளையில், இந்த விலை உயர்வு நடுத்தர மற்றும் ஏழை குடும்பங்களின் மாதாந்திர பட்ஜெட்டைப் பெரிதும் பாதிக்கும். சமையலில் காரத்திற்கு முக்கியமாக சேர்க்கப்படும் மிளகாய் வற்றலின் விலை கடந்த சில வாரங்களாகவே ஏறுமுகமாக உள்ளது. கடந்த மாதம் சந்தையில் ஒரு கிலோ 220ரூபாய்க்குவிற்கப்பட்ட மிளகாய் வற்றல், தற்பொழுது தரத்திற்கு ஏற்ப 270 ரூபாய் முதல் 300 ரூபாய்க்கு மேல் வரை விற்று மக்களை அதிர வைத்துள்ளது. இதேபோல், குழம்புத்தூள் அரைக்க பயன்படும் தனியாவின் விலையும் கிலோ 150 ரூபாயில் இருந்து உயர்ந்து, தற்பொழுது 220 ரூபாயாக அதிகரித்துள்ளது.

மளிகை பொருட்களிலேயே மிக கடுமையான விலை உயர்வை சந்தித்திருப்பது பூண்டுதான். கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை கிலோ 150 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த பூண்டின் விலை, தற்பொழுது கிலோ 280 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பூண்டின் விலை மிக குறுகிய காலத்தில் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது, நடுத்தர குடும்பத்து இல்லத்தரசிகள் கடும் அதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்ந்துள்ளனர். இதேபோல் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் அதிகம் பயன்படுத்தும் சமையல் எண்ணெய்களின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சந்தையில் லிட்டர் 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பாமாயில் தற்பொழுது லிட்டர் 185 ரூபாயாக அதிகரித்துள்ளது.

# MCD chief Sanjeev Khirwar, who was at the centre of dogwalk row, in focus after Satya Niketan tragedy



*MCD Commissioner Sanjeev Khirwar, who allegedly emptied a Delhi stadium to walk his dog in 2022, is in spotlight over the fatal Satya Niketan building collapse. Sanjeev Khirwar, the Delhi bureaucrat who was at the centre of a controversy years ago after allegedly getting Delhi's Thyagaraj Stadium emptied so he could walk his dog, is back in the spotlight – this time over the deadly collapse of a five-storey building in Satya Niketan. Khirwar, the current Municipal Corporation of Delhi (MCD) commissioner, has been speaking about the building collapse that has claimed seven lives and triggered questions over unauthorised construction, regulatory failures and the civic body's role in preventing such disasters. Speaking about the collapse, Khirwar said, "Unfortunately, we have lost seven lives. We think the building next to the collapsed building has weakened, and it was strengthened through the night. We will take it up for demolition in a calibrated manner in the next 1-2 days." He also said the MCD had been taking action against unauthorised construction in the area."In August, we had passed demolition orders for 3-4 buildings in the same area. A regular identification is conducted. In the last three months, 960 demolitions were carried out, 407 buildings were sealed, and notices were served to 1500 buildings for sealing and demolition. This is a regular process to take action against unauthorized construction," he added, speaking to ANI news agency. Khirwar told HT that officials have "zero tolerance" against unauthorised construction and that the building department would be made accountable in such cases. His remarks come as the Delhi high court on Monday has questioned not just the role of the property owner but also that of the MCD and other authorities in the collapse.*

*The Ministry of Home Affairs in January this year appointed Khirwar as the commissioner of the Municipal Corporation of Delhi. He is a 1994-batch Arunachal Pradesh-Goa-Mizoram and Union Territories (AGMUT) cadre Indian Administrative Service (IAS) officer.*



ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீ கஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கத்தோடு வீ த லீடர்ஸ் இயக்கம் இணைந்து நேற்று (07.09.2026) அரசு மருத்துவமனை புற நோயாளிகளுக்கு வழங்கிய அன்னதான நிகழ்வு. இந்நிகழ்வில் சன்மார்க்க சங்க நிறுவனர் செல்லதுரை, நந்தகுமார் மற்றும் வீ த லீடர்ஸ் இயக்கத்தின் தன்னார்வலர்கள் அண்ணாதுரை எனும் கௌசிகன் பாலசுப்பிரமணியம், சுபஸ்ரீ மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை 2026 மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (07.09.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

## கோவை சரவணா நகர் பகுதியில் உள்ள

# பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக நடைபெற்ற முதலாம் ஆண்டு ஸ்தோத்திர கூட்ட நிகழ்ச்சி

## கோவை சாய்பாபாகாலனி பகுதியில் சீறும் சிறப்புமாக நடைபெற்றது



கோவை சரவணா நகர் பகுதியில் பெத்தேலஹேம் ஜாய் ஜெபவீடு எனும் தேவாலயம் அமைந்துள்ளது இந்த தேவாலயத்தின் முதலாம் ஆண்டு ஸ்தோத்திர கூட்ட நிகழ்ச்சி

கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள தனியார் அரங்கில் நடைபெற்றது. பெத்தேல் ஜாய் ஜெபவீட்டின் தலைமை போதகர் ஜான் பீட்டர், உதவி போதகர் ஜெயக்குமார், தலைமை மூப்பர் சுத்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், கிறிஸ்தவ துதி பாடல்கள் பாடியும், ஆராதனை கீதங்கள் பாடியும், குழந்தைகளின் நடனநிகழ்ச்சியும் நடைபெற்றது. மேலும் பைபிளில்எழுதபட்ட வசனங்களை எடுத்து கூறியும், விழா சீறும் சிறப்புமாக நடைபெற்றது.

முதலாம் ஆண்டு ஸ்தோத்திர கூட்ட நிகழ்ச்சிஎன்பதால்இந்த நிகழ்ச்சியில் சுமார் 100க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் இரவு உணவுடன் விழா நிறைவு பெற்றது இந்த நிகழ்ச்சியில், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலருமான நோட்டரி வழக்கறிஞர் புஸ்பாணந்தம், ஜெபா, வர்ஷா, வர்ஷினி, அரசு போக்குவரத்து கழக ஒய்வு பெற்ற ஓட்டுநர் கிருஷ்ணகுமார், பாஸ்டரம்மா ஜாய்ஸ், சௌந்தரராஜன், ரிஸ்மா வர்ஷினி, ராஜேஷ், போதகர் பாபு, போதகர் கனகராஜ், சகோதரி பெரில், இவாஞ்சலின் ஜான் ஜோஸ்வா, சகோதரி கெட்ஸி, போதகர் மோஸஸ் ஜெயக்குமார், அரசு போக்குவரத்து ஜெபக்குழு சார்பாக ராஜா நம்பி, துரைராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.